**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 17.11.2025.**

| | |
|---|---|
| **Name : சுப்பிரமணி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. ) (Accused 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) எதிரிகளுக்கும் எனக்கும் நிலப்பிரச்சனை உள்ளது என்றால் ஆமாம். நிலப்பிரச்சனை சம்மந்தமாக சிவில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். நான் எதிரிகளை அடித்து என் மீது குற்ற எண்.15/2022 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்னை மருத்துவமனையில் யார் சேர்த்தார்கள் என்றால் மருமகன் என்னை சேர்த்தார்.

2) எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் காலை 08.30 மணியிலிருந்து 9 மணிக்குள் சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்ற போது அன்றையதினமே போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். யார் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன்.

3) எனக்கு ரத்தம் அதிகமாக போனதால் உடனே தகவல் கொடுத்தேன். என் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 4 கிலோமீட்டர் தூரம் இருக்கும். உடனே காவல் நிலையம் செல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது நான் பொய்

புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் வாக்குமூலம் யார் வாங்கினார்கள் என்றால் போலீசார் வாங்கினார்கள். அவர்கள் உதவி ஆய்வாளரா என்றால் போலீசாராகும்.

4) நான் நடந்த விவரத்தை கையில் எழுதி கொடுத்தேனா என்றால் ஆமாம். எதிரிகள் மீது நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**